# மார்ச் - 23 - வியாழன்

## புனித தர்பியுஸ்

**“என் குரலுக்கு செவி கொடுங்கள் அப்போது நான் உங்களுக்கு கடவுளாய் இருப்பேன். நீங்கள் எனக்கு மக்களாய் இருப்பீர்கள்.’’ (எரே.7:23)**

-----------------------------------------------------------------------------------------------------------

### முதல் வாசகம்: ஏரேமியா 7 : 23 – 28

ஆனால் நான் அவர்களுக்குக் கொடுத்த கட்டளை இதுவே: என் குரலுக்குச் செவி கொடுங்கள் அப்போது நான் உங்களுக்குக் கடவுளாய் இருப்பேன். நீங்கள் எனக்கு மக்களாய் இருப்பீர்கள். நான் கட்டளையிட்ட நெறிகள் அனைத்தையும் கடைப்பிடியுங்கள். அது உங்களுக்கு நலம் பயக்கும். அவர்களோ செவி சாய்க்கவும் இல்லை. கவனிக்கவும் இல்லை. பிடிவாத குணமுடைய அவர்களின் தீய உள்ளத்தின் திட்டப்படி நடந்தார்கள் முன்னோக்கிச் செல்வதற்குப் பதில் பின்னோக்கிச் சென்றார்கள். உங்கள் மூதாதையர் எகிப்து நாட்டிலிருந்து வெளியேறிய நாளிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு நாளும் தொடர்ந்து என் ஊழியர்களாகிய இறைவாக்கினர்களை உங்களிடம் அனுப்பி யுள்ளேன். அவர்களோ எனக்குச் செவிசாய்க்கவில்லை. கவனிக்கவில்லை. முரட்டுப் பிடிவாதம் கொண்டு தங்கள் மூதாதையரைவிட அதிகத் தீச்செயல் செய்தனர். நீ அவர்களிடம் இச்சொற்களை எல்லாம் கூறுவாய் அவர்களோ உனக்குச் செவிசாய்க்க மாட்டார்கள். நீ அவர்களை அழைப்பாய். அவர்களோ உனக்குப் பதில் தரமாட்டார்கள். தங்களின் கடவுளாகிய ஆண்டவரின் குரலைக் கேளாத, அவர் தண்டித்தும் திருந்தாத இனம் இதுவே, என அவர்களிடம் சொல். உண்மை அழிந்து போயிற்று. அது அவர்கள் வாயிலிருந்து அகன்று போயிற்று.

**பதில்பாடல் :** உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதீர் ஆண்டவர் குரலைக் கேட்டிடுவீர்

### நற்செய்தி : லூக்கா 11 : 14 – 23

அக்காலத்தில் ஒரு நாள் இயேசு பேச்சிழந்த ஒருவரிடமிருந்து பேயை ஓட்டினார். பேய் வெளியேறவே, பேச்சற்ற அவர் பேசினார். கூட்டத்தினர் வியந்து நின்றனர். அவர்களுள் சிலர், ”பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான்” என்றனர். வேறு சிலர் அவரைச் சோதிக்கும் நோக்குடன், வானத்திலிருந்து ஏதேனும் ஓர் அடையாளம் காட்டுமாறு அவரிடம் கேட்டனர். இயேசு அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து, அவர்களிடம் கூறியது ”தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப்போகும். அவ்வாறே பிளவுபடும் வீடும் விழுந்துவிடும். சாத்தானும் தனக்கு எதிராகத் தானே பிளவுபட்டுப் போனால் அவனது அரசு எப்படி நிலைத்து நிற்கும்? பெயல்செபூலைக் கொண்டு நான் பேய்களை ஓட்டுகிறேன் என்கிறீர்களே. நான் பெயல்செபூலைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறேன் என்றால் உங்களைச் சேர்ந்தவர்கள் யாரைக் கொண்டு பேய் ஓட்டுகிறார்கள்? ஆகவே அவர்களே உங்கள் கூற்று தவறு என்பதற்குச் சாட்சிகள். நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகிறேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா! வலியவர் ஆயதம் தாங்கித் தம் அரண்மனையைக் காக்கிறபோது அவருடைய உடைமைகள் பாதுகாப்பாக இருக்கும். அவரைவிட மிகுந்த வலிமையுடையவர் ஒருவர் வந்து அவரை வென்றால் அவர் நம்பியிருந்த எல்லாப் படைக் கலங்களையும் பறித்துக் கொண்டு, கொள்ளைப் பொருளையும் பங்கிடுவார். ”என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார் என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறச் செய்கிறார்“ என்றார்.

**தியானம்:** எமது வாழ்வின் நிறைவு இறைவனின் வார்த்தைக்கு செவிசாய்த்து அவரோடு ஒன்றிணைந்து வாழ்வதில்தான் தங்கியுள்ளது என்பதனை இன்றைய இறைவார்த்தைகள் தெளிவுபடுத்துகின்றது. கடவுளுக்கு கீழ்ப்படியாமையினால் வீழ்ந்துவிட்ட இஸ்ரவேல் மக்களுக்கு இறைவாக்கினர் எரேமியா மூலமாக கடவுள் கூறியது. “என் குரலுக்கு செவி கொடுங்கள் அப்பொழுது நான் உங்களுக்கு கடவுளாய் இருப்பேன் நீங்கள் எனக்கு மக்களாய் இருப்பீர்கள்.’’ என்கின்றார். நற்செய்தி வாசகத்திலும் இதுபோன்றுதான் ஓர் அழைப்பு எமக்கு விடப்படுகின்றது. அதாவது “என்னோடு இராதவர் எனக்கு எதிராய் இருக்கின்றார் என்கின்றார் இயேசு. எமது வாழ்வின் வழியும் திசையும் கடவுளின் திட்டம் என்பதை அதன்படி நடக்கும் போதுதான் நம் வாழ்க்கைக்கு அர்த்தமும் நிறைவும் ஏற்படும். மாறாக சுயநலத்தை மையமாகக் கொண்டு கிறீஸ்தவ மதிப்பீடுகளை உதாசீனம் செய்து வீட்டிலும், நாட்டிலும், சமுதாயத்திலும் நடப்போமாயின் நாம் கிறிஸ்துவுக்கு எதிராக இருக்கின்றோம் என்பதே உண்மை. எனவேதான் இத் தவக்காலத்தில் எம்மையும் எமது உண்மை நிலையையும் உணர்ந்து இறைவார்த்தையை எமது வாழ்வாக்குவோம். எமது வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவோம்.